# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:117** **தேதி:-13.07.2016**

**மத்திய தொலை தொடர்பு இணை அமைச்சர் திரு மனோஜ் சின்ஹா மற்றும் CMD BSNL உடன் FORUM தலைவர்கள் சந்திப்பு**

அன்புள்ள தோழர்களே,

புதியதாக பொறுப்பேற்றுள்ள மத்திய தொலை தொடர்பு இணை அமைச்சர் திரு மனோஜ் சின்ஹா அவர்களை FORUMத்தின் CORE COMMITTEE தலைவர்களான தோழர் P.அபிமன்யு அமைப்பாளர், தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA மற்றும் தோழர் K.செபாஸ்டியன் GS SNEA ஆகியோர் 13.07.2016 அன்று சந்தித்தனர். நமது தலைவர்கள் மத்திய தொலை தொடர்பு இணை அமைச்சர் அவர்களை பூங்கொத்து கொடுத்து, சால்வை அணிவித்து வரவேற்றனர். அவர்கள் BSNLஐ புத்தாக்கம் செய்திட FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS எடுத்து வரும் முயற்சிகளை அமைச்சரிடம் விவரித்தனர். BSNL ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் தற்போது அமுலாக்கி வரும் FORUMத்தின் திட்டமான 'இன்முகத்துடன் சேவை' தொடர்பாகவும் விவரித்தனர். BSNL ஓய்வூதியதாரர்களுக்கு அடுத்த ஓய்வூதிய மாற்றத்தை உறுதி செய்வதற்கு அமைச்சரின் தலையீட்டை நமது தலைவர்கள் கோரினார்கள். மேலும் ஓய்வூதிய பங்கீடு, ஊதிய விகிதத்தின் உயர்ந்த பட்ச அளவில் இல்லாமல், உண்மையான அடிப்படை சம்பளத்தில் கணக்கிடப்பட வேண்டும் என்றும் அவரை கேட்டுக் கொண்டனர். இந்த விஷயங்கள் தொடர்பாக எழுத்துபூர்வமாக கொடுக்க FORUM தலைவர்களை கேட்டுக் கொண்ட மத்திய இணை அமைச்சர், இந்த பிரச்சனைகளில் கவனம் செலுத்துவதாக உறுதி அளித்துள்ளார்.

**CMDஉடன் FORUMத்தின் CORE COMMITTEE தலைவர்கள் சந்திப்பு:-** அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பின் மையக் குழு சார்பில், CMD அவர்களை, கூட்டமைப்பின் அமைப்பாளர் தோழர். பி. அபிமன்யூ, AIBSNLEA பொதுச் செயலாளர் தோழர். பிரஹலாத் ராய் ஆகியோர் 12.7.2016 அன்று சந்தித்தனர், (SNEA பொதுச் செயலாளர் தோழர். கே. செபாஸ்டின் டெல்லியில் இல்லாததால், இக்கூட்டத்தில் அவர் கலந்து கொள்ள இயலவில்லை). இக்கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்தின் விவரங்கள் பின்வருமாறு :

1) முதல் அம்சமாக, CMD அவர்கள், மத்திய பிரதேசம், மஹராஷ்டிரா, உ.பி., உத்தரகாண்ட், பீகார் மற்றும் பல மாநிலங்களில் கனமழையினால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டி, பழுதில்லா கட்டமைப்பைப் பராமரித்திடவும், பருவமழைக் காலத்தில் நல்ல சேவை வழங்கிடவும் ஊழியர்களின் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப் பட வேண்டும் என கேட்டுக் கொண்டார். மையக் குழு அத்தகைய ஒத்துழைப்பு முழுமையாக வழங்கப் படும் என உறுதியளித்தது.

2) 'புன்னகையோடு சேவை' இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், 10.8.2016 தேதியை ஒட்டி, அனைத்து மாவட்டங்களிலும் பேரணி நடத்துவதற்கு கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது என்று மையக் குழு உறுப்பினர்கள், CMD -யிடம் தெரிவித்தனர். BSNL நிறுவனத்தின் பல்வேறு திட்டங்களையும், கருவிகளையும் மக்கள் மத்தியில் விளம்பரப் படுத்தும் வகையில் இந்தப் பேரணிகள் பயன்படும். நிர்வாகமும், ஊழியர்களும் கூட்டாக இப்பேரணிகளை நடத்த வேண்டும் என்று அவர்கள் ஆலோசனை தெரிவித்தனர். 10.8.2016

அன்று பேரணிகளை நடத்துவதை ஏற்றுக் கொண்ட CMD அவர்கள், இது குறித்து கார்ப்பரேட் அலுவலகத்திலிருந்து, தலமட்ட அலுவலகங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்படும் என உறுதியளித்தார்.

3) தொலைதொடர்பு இலாகாவிடமிருந்து BSNL நிறுவனத்திற்கு சொத்துக்களை மாற்றும் பணிகளில் மாநில நிர்வாகங்களால் ஏற்பட்டுள்ள தேவையற்ற தாமதம் குறித்து மையக்குழு உறுப்பினர்கள் CMD -யிடம் கவலை தெரிவித்தனர். தேவையான அடிப்படைப் பணிகளை மாநில நிர்வாகங்கள் செய்யாததால்தான் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது என அவர்கள் சுட்டிக் காட்டினர். மாநில நிர்வாகங்களுக்கு கார்ப்பரேட் அலுவலகம், உரிய உத்தரவுகளை அனுப்ப வேண்டும் எனவும், இந்நடவடிக்கைகள் கார்ப்பரேட் அலுவலகத்தால் கண்காணிக்கப் பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என CMD உறுதியளித்தார்.

4) BSNL நிறுவனத்தின் கணக்குகளை DOT சரிபார்க்கும் பணியின் முன்னேற்றம் குறித்து மையக்குழு உறுப்பினர்கள் கேட்டறிந்தனர். 2016 டிசம்பர் மாதத்தில் இப்பணி முடிவடையும் என DOT உறுதியளித்துள்ளதாக CMD பதிலளித்தார்.

5) விவாதத்தின் போது CMDஅவர்கள், மையக்குழு உறுப்பினர்களிடம் பின்வரும் தகவல்களைத் தெரிவித்துள்ளார் :

அ) 2016 ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலாண்டில், கடந்த வருடம் இதே காலாண்டோடு ஒப்பிடும் போது, BSNL நிறுவனத்தின் ஒட்டு மொத்த வருமானம் 3% அதிகரித்துள்ளது. மொபைல் சேவையின் மூலம் வருமானத்தின் வளர்ச்சி 8% ஆக உள்ளது. வருமானத்தின் இதர பகுதி தரைவழி இணைப்புகளின் மூலம் உள்ளது. நிறுவன வணிகத்தின் மூலம் வரும் வருமானம் குறைந்துள்ளது.

ஆ) 'இன்மர்சாட்' -உடன் கூட்டு செயல்பாடாக செயற்கைக்கோள் மூலம் வர்த்தக அடிப்படையில் சேவை வழங்குவதற்கான நடவடிக்கைகளை BSNL நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம், விமானங்களிலும், கடல்வழி செல்லும் கப்பல்களிலும், பேரிடர் காலங்களிலும் வை-ஃபை மூலம் சேவை வழங்கிட BSNL நிறுவனத்தால் முடியும். இந்த சேவைகளின் மூலம் 500 கோடி ரூபாய் வருமானத்தை ஈட்ட முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இ) வோடஃபொன், ஐடியா, ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ், ரிலையன்ஸ் ஜியோ ஆகிய நிறுவனங்களோடு மாநிலங்களுக்கிடையே ரோமிங் வசதி ஒப்பந்தம் மேற்கொள்ள BSNL நிறுவனம் முயற்சித்து வருகிறது. ஏர்டெல் நிறுவனம் இத்தகைய ஒப்பந்தத்தை BSNL நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**